# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● அக்டோபர் 19, 2024

Weekly E-paper ● October 19, 2024




## நீதிதேவன் மயக்கம்!

சுப. வீரபாண்டியன்

### திருமணச் சட்டங்களில் மொழிமாற்றத்தின் முக்கியத்துவம்

அருண் தட்சண்

### தமிழ் வாழ்க! இந்தி வீழ்க!

தலையங்கம்

### வாழை என்னும் பொய்மை

சு.விஜயபாஸ்கர்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● அக்டோபர் 19, 2024 Weekly E-paper ● October 19, 2024


# நீதிதேவன் மயக்கம்!

சுப. வீரபாண்டியன்

அண்மையில் நீதிமன்றங்களில் இருக்கும் நீதி தேவதையின் கற்பனையான உருவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. கண்கள் கட்டப்பட்ட நிலையில், தராசை ஒரு கையிலும், வாளை மறு கையிலும் பிடித்திருக்கும் நீதி தேவதைதான் இதுவரையில் நாம் பார்த்த வடிவம்!

கண்களின் கட்டு அவிழ்க்கப்பட்டு, வாள் பிடித்திருந்த கையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தை ஏந்தியபடி, இன்றைய புதிய நீதி தேவதை காட்சியளிக்கிறார்.

காட்சி மாறி இருக்கிறது! ஆனாலும் அண்மையில் வெளிவந்துள்ள சில தீர்ப்புகள் நம்மை அச்சுறுத்துகின்றன. சென்னை உயர்நீதிமன்றமும், பெங்களூர் உயர்நீதிமன்றமும் மதம் தொடர்பான இரண்டு வழக்குகளில் தீர்ப்பு வழங்கி உள்ளன.

ஸ்ரீரங்கம் கோயில் வாசலில் உள்ள தந்தை பெரியார் சிலையை அப்புறப்படுத்த வேண்டும் என்று பேசியதற்காக திரைப்படத் துறையைச் சார்ந்த கனல்கன்னன் கைது செய்யப்பட்டார். ஆனால் அந்த வழக்கை ரத்து செய்திருக்கும் உயர்நீதிமன்றம், அந்தச் சிலையின் பீடத்தில் உள்ள, “கடவுளை நம்புகிறவன் முட்டாள், கடவுளை வழிபடுபவன் காட்டுமிராண்டி” என்னும் வரிகளைத்தான் அவர் நீக்கச் சொல்லி இருக்கிறார். அதற்காக அவர் மீது ஒரு வழக்கு




தொடுக்க முடியாது என்று கூறி இருக்கிறது!

உண்மை என்னவென்றால் அந்தச் சிலையின் பீடத்தில் அப்படி வாசகங்கள் எழுதப்படவே இல்லை என்பதுதான்! இல்லாத வாசகங்களை எப்படி நீக்குவது என்பதை உயர்நீதிமன்றம்தான் சொல்ல வேண்டும்.

பெங்களூரில் கடந்த செப்டம்பர் 23ஆம் நாள் இரவு இருவர் மசூதிக்குள் நுழைந்து ஜெய்ஸ்ரீராம் என்று உரத்துக் குரல் எழுப்பி உள்ளார்கள். அதற்காக அவர்களைக் காவல்துறை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி இருக்கிறது! ஆனால் நீதிமன்றமோ அதில் ஒன்றும் பிழை இல்லை. அப்படி ஜெய் ஸ்ரீ ராம் என்று மசூதிக்குள் முழக்கமிட்டால் என்ன தவறு என்று கேட்டு அவர்களை விடுதலை செய்திருக்கிறது.

நீதி தேவதையின் கண்கள் இப்போதும் கட்டப்பட்டுத்தான் இருக்கின்றனவோ என்று எண்ணத் தோன்றுகிறது. ●



இந்தியாவுக்கு ஒரு பொது பாஷை வேண்டுமானால் அல்லது வியாபாரத்திற்கு ஒரு பொது பாஷை வேண்டுமானால் ஆங்கில பாஷையைத் தெரிந்து எடுத்து அதை எல்லா மக்களிடையிலும் பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல் வேறு பாஷையைப் பற்றி யோசிப்பது முட்டாள் தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும். – தந்தை பெரியார்.

(குடிஅரசு, 20.01.1929)




# திருமணச் சட்டங்களில் மொழிமாற்றத்தின் முக்கியத்துவம்

## அருண் தட்சண்

திருமண சட்டங்களில் 'கணவன்', 'மனைவி' என்ற வார்த்தைகளைத் 'தம்பதி' (spouse) என மாற்றுவது, அனைத்து தம்பதிகளுக்கும் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் ஒரு முக்கியமான முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

### பாலினம் மற்றும் பாலின அடையாளம் பற்றிய பாரம்பரியப் புரிதல்:

அறிவியல் வளர்ச்சி பெறாத பண்டைய காலங்களில் பல சமூகங்களில் பாலினத்தை இரண்டாகப் (binary) வகைப்படுத்துவது வழக்கமாக இருந்தது. பெரும்பாலான கலாச்சாரங்கள், மனிதர்களை மட்டும் 'ஆண்' அல்லது 'பெண்' என்ற அடிப்படையில் பிரித்து, ஒவ்வொரு பாலினத்துக்கும் குறிப்பிட்ட பங்கை ஒதுக்கின. இந்த அறிவியல் வளர்ச்சி பெறாத பார்வை அன்று முதல் இன்று வரை பலரின் உண்மையான பாலின அடையாளங்களை மறுத்து அவர்களைப் பல அநீதிகளுக்கும் இன்னல்களுக்கும் உட்படுத்தி வருகிறது. இந்நிகழ்வானது திருமணச் சட்டங்களில் ஆழமாக பதிந்துள்ளது.



அறிவியல் மற்றும் சமூக ஆய்வுகள் இப்போது பாலினம் மற்றும் பாலுறவு பற்றிய புரிதலை விரிவாக்கியுள்ளன. பாலினம் (gender) ஒரு தொடர்ச்சியான வடிவம் (spectrum) எனவும், பாலீர்ப்பு (sexual orientations) என்பது பலதரப்படுத்தப்பட்டவையாக இருப்பதையும் அறிய முடிகிறது. இவை, மனிதர்களின் அடையாளம் மற்றும் உறவுகளைப் பல்வேறு வடிவங்களில் ஏற்றுக்கொள்வதற்கான தேவையை வலியுறுத்துகின்றன. இதை சமீபத்திய சட்ட திருத்தங்கள் பிரதிபலிக்க வேண்டியது அவசியமாகும்.

### LGBTQIA+ சமூகத்துக்கான சமூக மற்றும் சட்டப் பாகுபாடுகள்:

LGBTQIA+ சமுதாயத்தினருக்கு விவாகப்பத்திரம், குடும்பப் பயன்பாடு மற்றும் சொத்துரிமை போன்ற அம்சங்களில் பரவலான பாகுபாடு நிலவுகிறது. இந்தியச் சட்டங்கள், குறிப்பாக திருமணச் சட்டங்கள், உறவுகளைப் பாலினம் மற்றும் பாலுறவின் அடிப்படையில் நிர்ணயிக்கின்றன. இதனால், ஒரே பாலின உறவுகளுக்கு, மற்ற தம்பதிகள் பெறும் நிதிப் பாதுகாப்பு, சொத்துரிமை மற்றும் மருத்துவப் பாதுகாப்பு போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

திருநிலை அடையாளம் கொண்டவர்கள் (transgender individuals) இதனால் பெரிதும் புறக்கணிக்கப்படுகின்றனர். அவர்களின் உறவுகள் மட்டுமல்ல, அவர்களின் அடையாளங்கள் கூட சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படுவதில் பல தடைகள் உள்ளன. ஒரே பாலினத் தம்பதிகளுக்கு திருமணம் என்பது அரசு அங்கீகாரம் என்பதைத் தாண்டி அடையாளம் மற்றும் உரிமைக்கான சமூக அங்கீகாரமாகும்.

### சுப்ரியோ VS. இந்திய ஒன்றியம் – தீர்ப்பின் முக்கியத்துவம்

2023-இல், சுப்ரியோ vs. இந்திய ஒன்றியம் வழக்கில், உச்ச நீதிமன்றம் இந்த பாகுபாடுகளை எடுத்துக்காட்டியது. நீதிபதிகள், பால் மற்றும் பாலின அடையாளத்தைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தினர். திருமணத்தை அனைவரையும் உள்ளடக்கும் துறையாக மாற்ற வேண்டும் என்பதையும், அனைத்து தம்பதிகளுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் நீதிமன்றம் வலியுறுத்தியது.

எனினும், நீதிமன்றம், சட்டப் பாகுபாட்டைச் சரிசெய்வது சட்டமன்றத்தின் பொறுப்பாகும் என்று தெரிவித்தது. மேலும், குயர் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்க, உயர்மட்டக் குழுவை (HPC) அமைக்க உத்தரவிடப்பட்டது.

### மொழிமாற்றத்தின் சட்டரீதியான பயன்கள்:

'கணவன்', 'மனைவி' என்ற சொற்களை 'தம்பதி' என மாற்றுவது, பாலின அடிப்படையிலான பங்கு ஒதுக்கீடுகளை நீக்கும். இது விவாகரத்து, சொத்துரிமை மற்றும் அரசு நலன்களை ஒரே பாலினத் தம்பதிகளுக்கும் வழங்குவதற்கான அடித்தளமாக அமையும். மேலும், திருநிலை அடையாளம் கொண்டவர்கள் மற்றும் தங்கள் விருப்பத்திற்கேற்ப இணைப்பில் உள்ளவர்கள் சம உரிமைகளைப் பெற முடியும்.

விதி சென்டர் (Vidhi Centre for Legal Policy) போன்ற அமைப்புகள், இந்த மொழிமாற்றத்தை முன்னெடுத்து, சட்டதிட்டங்களில் பிரச்சினையற்ற, பாலினத்தைத் தாண்டிய உரைகள் உள்வாங்கப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளன. இது, உறவின் தன்மை எதுவாக இருந்தாலும், சம உரிமைகள் மற்றும் சட்ட அங்கீகாரம் பெறும் நிலையை ஏற்படுத்தும்.

### மாற்றத்தின் சமூக விளைவுகள்:

இத்தகைய மொழிமாற்றம் மற்றும் சட்டரீதியான திருத்தங்கள், LGBTQIA+ சமூகத்தின் சட்டப் பாதுகாப்பையும், சமூக அங்கீகாரத்தையும் வலுப்படுத்தும். இது பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு, அல்லது பாலுறவின் அடிப்படையில் நிகழும் பாகுபாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டை வலுப்படுத்தும். ஒரே பாலினத் திருமணங்கள் மற்றும் திருநிலை அடையாள உறவுகள், சமூகத்தில் சமத்துவம் மற்றும் நீதி பெறுவதற்கான வழியை உருவாக்கும்.

இந்த மாற்றம், திருமணச் சட்டங்களில் புதிய பரிமாணங்களை உருவாக்கி, ஒற்றுமையும், அனைவரையும் உள்ளடக்கிய சமூகத் தளத்தை உருவாக்கும். பிரிவினையற்ற, ஒருங்கிணைந்த சமுதாயம் நோக்கிய முன்னேற்றத்தை மேற்கொள்ள இது அவசியமான படியாக இருக்கும். ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## தமிழ் வாழ்க! இந்தி வீழ்க!

கடந்த 18.10.2024 அன்று தமிழ்நாட்டின் ஆளுநர் பங்கேற்ற பொதிகைத் தொலைக்காட்சியில் நடைபெற்ற இந்தி தின விழா கொண்டாட்டத்தில் பாடப்பெற்ற தமிழ்த்தாய் வாழ்த்தில் "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்" என்ற வரிகள் தவிர்க்கப்பட்டுள்ளன. இது திட்டமிட்டு நடைபெற்ற ஒன்று அல்ல என்று பொதிகைத் தொலைக்காட்சி மன்னிப்புக் கோரியிருந்தாலும், தொடர்ந்து திராவிடம் என்பதற்கு எதிராக இவ்வாறு நடைபெறுவதைக் கடந்து செல்ல நம்மால் இயலாது.

இது குறித்து நமது முதல்வர் அவர்கள் கடுமையான எதிர்வினையை ஆற்றியிருக்கிறார். "ஆளுநரா? ஆரியரா?" என்ற கேள்வியை எழுப்பி, தமிழ்நாட்டின் சட்டப்படி நடக்க வேண்டிய ஆளுநர், இஷ்டப்படி நடப்பதால் அந்தப் பதவியை வகிக்கவே தகுதி இல்லாதவர் என்றும், திராவிட ஒவ்வாமையால் அவதிப்படும் ஆளுநரை ஒன்றிய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தி மாத விழாவினை தமிழ்நாட்டின் தொலைக்காட்சியில் கொண்டாடுவதைத் தொடக்கத்திலேயே முதல்வர் எதிர்த்து வந்துள்ளார். பொதிகைத் தொலைக்காட்சிக்கு டி. டி. என்று பெயர் மாற்றியது, அதன் சின்னத்தைக் காவி நிறம் ஆக்கியது, தற்போது தமிழ்த்தாய் வாழ்த்து அவமதிப்பு என்று தொடர்ச்சியாகத் தமிழர் விரோத நடவடிக்கைகளை ஒன்றிய அரசும், ஆளுநரும் மேற்கொள்வதை நிறுத்த வேண்டும். அவ்வாறு நிறுத்தாவிடில் தமிழ்நாட்டு மக்கள் அதற்கான பாடத்தைக் கற்பிப்பார்கள்.

மொழிச் சமத்துவம் குறித்து முன்னெடுக்க வேண்டிய முக்கியமான ஒரு செயல்பாடு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 351-ஐ நீக்குவது என்பது. ஏன் அப்பிரிவை நீக்க வேண்டும்? ஏன் பிரிவு 351 மொழிச் சமத்துவத்திற்கு எதிரானது?

அப்பிரிவில் கூறப்பட்டுள்ள வாக்கியம் பின்வருமாறு:

Article 351: It shall be the duty of the Union to promote the spread of the Hindi language. அதாவது இந்தி மொழியைப் பரப்புவது ஒன்றிய அரசின் கடமையாகும் என்கிறது இப்பிரிவு.

இந்த ஒரு உறுப்பைக் காரணமாக வைத்துக் கொண்டே இந்தியானது பல்வேறு இடங்களிலும், பல்வேறு தளங்களிலும் நம் மீது திணிக்கப்படுகிறது.

இந்திய மொழிகளில் ஒன்றான இந்திக்கு, வேறு எந்த இந்திய மொழிக்கும் தரப்படாத முக்கியத்துவம் ஏன் தரப்பட்டுள்ளது ?

இது இந்திக்கு மட்டும் ஒரு சிறப்பான இடத்தையும் மற்ற இந்திய மொழிகளை இரண்டாம் தரமாகக் கருதப்படுவதற்கும் முக்கிய காரணமாக அமைகிறது இல்லையா?

எனவே இப்பிரிவு இந்தி ஆதிக்கத்தை நம் மீது திணிப்பதாலும், மொழிச் சமத்துவத்திற்கு எதிரானது என்பதாலும் மாநில சுயாட்சிக்கான நமது முழக்கங்களில் முக்கியமான ஒரு முழக்கமாக "பிரிவு 351 நீக்கப்பட வேண்டும்" என்பதும் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

**கருஞ்சட்டைப் பதிப்பகத்தின்**
**அய்ந்து புத்தகங்கள் வெளியீட்டு விழா**
நாள்: 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை / நேரம்: மாலை 06:00
இடம்: அன்பகம், தேனாம்பேட்டை, சென்னை







## பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்

20.10.24 - ஞாயிறு - மாலை - மதுரை - திருமண வரவேற்பு

24.10.24 - வியாழன் - காலை 10.30 - சென்னை,
எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி - கருத்தரங்கம்

26.10.24 - சனி - மாலை - சென்னை, தலைவாணர் அரங்கம்
திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம் - தொடக்க விழா!



# வாழை எனும் பொய்மை

**திரை விமர்சனம்**

**சு.விஜயபாஸ்கர்**

இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் வெளிவந்திருக்கும் படம் வாழை. கலையரசன், நிகிலா விமல், திவ்யா துரைசாமி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கின்றனர். மாரி செல்வராஜின் பள்ளிப்பருவ வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு இத்திரைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. இளவயதில் தான் கண்டடைந்த அனுபவங்களை சிவனைந்தன் எனும் சிறுவன் மூலமாகக் கூறுகிறார் இயக்குநர் மாரி செல்வராஜ்.

அச்சிறுவன் 9 ஆம் வகுப்பு பயில்கிறார். விடுமுறை நாட்களில் வாழைத்தார் சுமக்கும் வேலை செய்கிறார். இருப்பினும் வாழைத்தார் சுமக்கும் வேலையை வெறுக்கிறார். அவரது குடும்பம் வறுமையில் வாடுகிறது. அவரது குடும்பத்தாரும், கிராமத்தில் உள்ளவர்களும் வாழைத்தார் சுமக்கும் வேலைக்குச் செல்கின்றனர். கூலி உயர்வு கேட்கின்றனர். கேட்ட கூலி உயர்வும் கிடைக்கிறது. அதன் பின்னர் என்ன நடந்தது என்பதே கதை.

உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் இப்படத்தில் துளி அளவு கூட உண்மை இல்லை. 9 ஆம் வகுப்பு பயிலும் சிறுவனான சிவனைந்தனுக்கு தன் பள்ளி ஆசிரியர் நிகிலா விமல் மீது ஈர்ப்பு வருகிறது. அதுவல்ல பிரச்சினை. சிறுவயதில் வரும் பாலுணர்வு இயல்பானது. ஆனால் அதை மிகக் கொச்சையாக ஆபாசமான திரைமொழியில் காட்சிப்படுத்தியிருப்பது வணிகத் தந்திரம். ஆபாசத்தின் உச்சம். காதலனும் காதலியும் பேசிக்கொள்ளும் வசனங்களை ஆசிரியர் நிகிலா விமலும் மாணவன் சிவனைந்தனும் பேசிக்கொள்கின்றனர். கீழே விழுந்த நிகிலா விமலின் கைக்குட்டையை சிவனைந்தன் எடுத்துவைத்துக் கொள்கிறான். அதில் உள்ள வாசனையை அடிக்கடி முகர்ந்து பார்த்துக் கொள்கிறான். ஒரு கட்டத்தில் தனது கைக்குட்டையை சிவனைந்தன் எடுத்து வைத்துள்ளான் என்பதைக் கண்டறிந்து விடுகிறார் நிகிலா விமல். இருப்பினும் அவனிடம் இருக்கட்டும் என்று கூறிவிடுகிறார். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சிவனைந்தன் நிகிலா விமலிடம் கைக்குட்டையைக் கொடுக்கிறான். உடனே நிகிலா விமல் ”நீயே இந்தக் கர்சிஃப்பை வைத்துக் கொள், ஆனால் நான் கொடுத்தேன் என்று சொல்லாதே“ என்கிறார். காதலனுக்குக் காதலி கொடுக்கும் பரிசு போல. யாரிடமும் சொல்லிவிடாதே என்று கண்டிப்புடன் கொடுக்கும் காதல் பரிசு.

அடுத்ததாக, வாழைத்தார் சுமக்கும் சிறுவனின் வலியை இப்படம் பதிவு செய்துள்ளதா என்றால் அதுவுமில்லை. சிவனைந்தனின் நண்பனாக வரும் சேகர் வாழைத்தார் தூக்கும் வேலை செய்வதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. வாழைத்தார் சுமக்கும் வேலைக்குள் சிவனைந்தன் தள்ளப்படுகிறான் என்பதைப் புரிய வைக்கும் அழுத்தமான காட்சிகள் இல்லை. ஒரு காட்சியில் சிவனைந்தனின் தாய், “பணத்திற்காக உன்னை வாழைத்தார் சுமக்கச் சொல்லவில்லை” என்கிறார். இன்னொரு இடத்தில் உன்னைக் காரணம் காட்டி வாழைத்தார் வியாபாரியிடம் முன்பணம் வாங்கிவிட்டேன் என்கிறார். அச்சிறுவன் தான் படிக்கும் வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்கும் மாணவன். அவனது தாய் சிலநேரங்களில் நீ வாழைத்தார் சுமந்து பழகிக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார். மற்றபடி அவனைப் படிப்பில் கவனம் செலுத்தச் சொல்லாமல் வாழைத்தார் சுமக்கும் வேலையைக் கற்றுக்கொள்ளச் சொல்வதற்கான எவ்விதமான அழுத்தமான காரணங்களும் இல்லை.




கூலி உயர்வு கேட்கும் தொழிலாளர்களைத் தண்டிக்கும் விதமாக வாழை வியாபாரி நடந்துகொள்கிறார், அதனால் 19 பேர் உயிரிழக்கின்றனர் என்ற காட்சியோடு படம் முடிகிறது. கூலி உயர்வு தான் பிரச்சினை என்றால், வாழை வியாபாரி கூலி உயர்வை எதிர்க்கிறார் என்பதைக் கூட அழுத்தமாகச் சொல்லவில்லை. கூலி உயர்வு கேட்டவுடன், வியாபாரி அதைத் தந்துவிடுகிறார். பட்டியல் சாதி மக்களின் மீது சுமத்தப்படும் சாதிய இழிவைச் சுட்டிக்காட்டுகிறதா வாழை? அப்படிப்பட்ட காட்சிகளும் இல்லை. அப்படியெனில் என்ன தான் பிரச்சினை?

ஏன் இப்படத்தில் உள்ள தன்முரண்களைச் சுட்டிக்காட்டுகிறேன்? வழக்கமான வணிகப் படம் என்றால், அதை நாம் பார்ப்பதுமில்லை. விமர்சிப்பதுமில்லை. ஆனால் இப்படம் உண்மைக் கதை, சமூகப் பிரச்சினைகளைத் தோலுரித்துக் காட்டும் படம் என்று சொல்லப்படுவதால், இப்படத்தில் சொல்லப்படும் கதையில் உண்மை உள்ளதா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சமூகப் பிரச்சினையைக் கூறும் படமெனில், அப்படத்திற்கு உண்மை மட்டுமே அச்சாணியாக அமையவேண்டும். இப்படத்தில் சொல்லப்படும் காட்சிகளில் துளியளவு கூட உண்மை இல்லை என்பதால், அதைச் சுட்டிக்காட்டும் வேலையைச் செய்துள்ளோம். இது உண்மைச் சம்பவத்தைக் அடிப்படையாகக் கொண்ட சமூகப் பிரச்சினையைப் பேசும் படமல்ல. காமெடி, காதல், காமம் என அனைத்துவித வணிக அம்சங்களையும் கொண்ட முழுநீள வணிக சினிமா. ●

**Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian**